**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**O.S. No.513/2020**
**Deposition of Witness for the Plaintiff – PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **பரத்குமார்** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **தெய்வசிகாமணி** | **தொழில்** | விவசாயம் |
| **Village:** | **சேமங்கி அஞ்சல்** | **Religion:** | |
| **Taluk:** | **புகளூர், கரூர்** | **Age :** | 43 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 27.03.2026 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை என் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணத்தின் தன்மை | சான்றாவணம் |
|---|---|---|---|
| 1. | | வாதி வழக்கறிஞர் தயார் செய்த தெய்வசிகாமணியின் குடும்ப வம்சாவழி வரைபடம் | வா.த.சா.ஆ.1 |
| 2. | 14.12.1981 | 1 வது பிரதிவாதி, அவரது தகப்பனாருக்கு இடையே நடைபெற்ற பாகப்பிரிவினை ஆவணத்தின் சான்றிட்ட நகல் | வா.த.சா.ஆ.2 |

| | | | |
|---|---|---|---|
| 3. | 27.08.1998 | 1வது பிரதிவாதி மற்றும் பழனிச்சாமி ஆகியோர் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் | வா.த.சா.ஆ.3 |
| 4. | 22.03.2010 | 1வது பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் | வா.த.சா.ஆ.4 |
| 5. | 20.03.2020 | 1வது பிரதிவாதி, 2வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் | வா.த.சா.ஆ.5 |
| 6. | | தாவா சொத்திற்குண்டான அடங்கல் கணக்கு பதிவேடு சான்றிட்ட நகல் | வா.த.சா.ஆ.6 |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**(பிரதிவாதிகள் வழக்கறிஞர் ஆஜர். கற்றறிந்த பிரதிவாதிகள் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.